## இன்று (1.10.2024) நடிகர் திலகம் சிவாஜிகணேசன் பிறந்த நாள்:

# நடிகருள் திலகமே, நாளெலாம் நும்புகழ் படிமிசை வளர்கவே; பல்லூழி வாழ்கவே!



சின்னய்யா இராசாமணி
தேடரிய செல்வனே!
நன்னயக் கணேச!
நாடகக் கலைஞனே!
மன்னவனே,
கலையுலகின்
மறையாத கதிரவனே!

வென்றுயர்ந்த
மராத்திய
வீரனாம் சிவாஜி
பொன்முடி சூடுதற்குப்
பூணூலார் போட்டதடை
வன்சாதி ஆரிய
வஞ்சகம் என அண்ணா
நன்றாகத் தீட்டிய
நாடகத்தில் சிவாஜியாய்
மின்னயாய் இடியாக
மேடையில் முழங்கியே
கன்னலாய் நடிப்பினைக் காட்டிய
திறம்கண்டு
தன்னலம் கருதாத
தந்தையவர் பெரியார்தாம்,
என்ன ஒரு நடிப்பு? இவர்
இருக்கின்ற சிவாஜியென
இன்றுமுதல் விளங்குவார்,
எதிர்காலம் வெல்லுவார்
என்றவர் வாழ்த்திட
எல்லையில் வானமானாய்!

திராவிடப் பேரியக்கம்
திரைக்களித்த செல்வனே!
ஒரேயொரு படத்தாலே
உலகளந்த பெருமாளே!
வராசக்தி என்றுநீ
வாய்திறந்து பேசிய
பராசக்தி படத்தருளால்
பாரெல்லாம் தெரிந்துவிட்டாய்!

புரையோடும் சமுதாயப்
புன்மைகளைப்
புலப்படுத்திச்
சரேலெனும் மின்னலாய்,
சடசடெனும் பேரிடியாய்
உரையாடல் தீட்டிய
உணர்ச்சியூற்றுக்
கலைஞரின்
கரைமோதும் அலையான
கனன்றெழும் தீயான
அறைந்தெழும் உரையாடல்
ஆவேசத் திரையாடல்
விரைவாகப் பேசிய
வெடிக்குரல் சிங்கமே!

நுரையாகப் பலபேரும்
நொடிநேரம் நில்லாமல்
கரைகின்ற கலையுலகில்
கரையேறி நின்றவனே!

இரைந்தெழும் காற்றாக,
இனிதெழும் ஊற்றாக
விரைந்தொளிர் கதிராக
விண்ணொளிர் நிலவாக
நரையின்றி மூப்பின்றி
நடுக்கின்றி ஒடுக்கின்றி
நிரந்தரம் ஆனவனே;
நெஞ்சங்கள் ஆள்பவனே!

விதையூன்றிக் கழகத்தை
விண்மரமாய்
வளர்ப்பதற்கு
வதையுண்டும் அண்ணா
வசவுற்றும் இழிவுற்றும்
பதைப்புண்டும் உடனிருந்தோர்
பழிப்புற்றும் இருக்கையில்
சதையாக நகமாகச்
சார்ந்திருந்த
கலைஞருடன்
எதையுமே கருதாமல்
எதிர்பார்ப்பும் இல்லாமல்
உதயமே காணாமல்
ஒளிநோக்கி இருந்தபோதும்
புதையலாய்க் கழகத்தைப்
போற்றியவ; அண்ணாவின்
இதயமே போதுமென
இலட்சியத்தோடு
இருந்தவ;
உதவிசெய நாடகத்தில்
ஒருகாசும் வாங்காமல்
நிதந்தோறும்
நடித்ததுடன்
நிறையுழைப்பும் தந்த உன்
கதையெல்லாம்
யார்அறிவார்?
காலந்தான் சீர்அறியும்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

எத்தனை எத்தனை
இறவாத வேடங்கள்!
அத்தனையும் மாந்தருக்கு
அறிவூட்டும் பாடங்கள்!
கத்தியை ஏந்தாத
கருத்தூட்டும் மாடங்கள்;
புத்தியைத் தீட்டுகின்ற
புதுமையின் கூடங்கள்!
தெத்துவாய்ப் பேர்வழிகள்
திரிகின்ற திரையுலகில்
வித்தகன்நீ ஏற்கின்ற
வேடத்திற்கு ஏற்றவாறு
ஒத்திசைவாய்ப் பேசுகின்ற
ஒப்பற்ற திறன்கண்டு
பொத்திவாய் திகைப்பார்கள்,
புதுமையைச் சுவைப்பார்கள்!
தித்திக்கும் நீபேசும்
செந்தமிழ் கேட்டாலோ!
எத்திக்கும் ஒலித்திடும்;
என்றென்றும் இனித்திடும்!

பாசமலர் என்றொரு
படத்தினைப் பார்த்தபின்
வாசமலர் ஒருபோதும்
வாடாத மலரென்று
பேசுகின்றார் இன்றுவரை!
பிழிந்தெடுத்த நடிப்பாலே
பேசுகின்ற காவியமாய்,
பேரழகு ஓவியமாய்
வீசுகின்ற தென்றலாய்
விளங்குதல் கண்டபின்
வேசந்தான் தரிப்பதற்கு
வேறெவர் இங்குளார்?
ஈசனே முயன்றாலும்
இயலாதுன் நடிப்பு வெல்ல!
பூசனை செய்யலாம்,
பொழுதெலாம் வாழ்த்தலாம்,
மாசிலா உன்னையே
மனத்தாலும் வணங்கலாம்!

பணக்காரன்
பரம ஏழை
பதிபக்தன் முதியவர்
குணக்கேடன் முழுமூடன்
குடிகாரன் பெருங்கள்வன்
வணங்காதான் படியாதான்
வழக்கறிஞன் மருத்துவன்
பிணைக்கின்ற காமுகன்
பேரெரிச்சல் காதகன்
மணம்பெறும் காதலன்
மணிமுடிக் காவலன்
இணக்கமாம் நாயகன்
எதிர்க்கின்ற போர்வீரன்
அண்ணனாய்த்
தம்பியாய்
அப்பனாய்த் தலைவனாய்
எண்ணத்தில் நிறைகின்ற
ஏந்தலாய்க் கலைஞனாய்க்
கணக்கில்லா வேடங்கள்,
கட்டபொம்மன் கப்பலோட்டிப்
பணமிழந்து சிறைப்பட்டுச்
செக்கிழுத்த சிதம்பரனார்
கணந்தோறும் உயிருள்ள
கதைமாந்தர் ஆக்கியே
தணலாக ஒளிர்ந்தவன்
தமிழரில் உயர்ந்தவன்!!

ஒன்பது மெய்ப்பாடும்
உன்வயம் மெய்ப்படும்!
மன்பதையில் உனைப்போல
மாறுபட்ட உணர்ச்சிகளை
நன்றாகக் காட்டுதற்கு
நடிகர்தான் இல்லையென்று
ஒன்றாகக் கருத்துரைப்பர்;
ஓங்கியே புகழ்ந்திடுவர்!

நின்றாலும் நடந்தாலும்
நீட்டியே படுத்தாலும்
வென்றாலும் தோற்றாலும்
வீழ்ந்தாலும் எழுந்தாலும்
சென்றாலும் சினந்தாலும்
சிரித்தாலும் அழுதாலும்
தின்றாலும் அருந்தினாலும்
திகைத்தாலும் பகைத்தாலும்
இன்றல்ல நேற்றல்ல இனிவரும்
காலத்தும்
என்றுமே உன்நடிப்பிற்கு
எவருமே ஈடாகார்
குன்றல்ல இமயத்தின்
கொடுமுடியாய் ஓங்கியதால்!

நடிகர்கள் நாயகனே!
நாடகக் காவலனே!
முடிசூடும் வேந்தனே,
முத்தமிழ் ஏந்தலே!
அடிதோறும் கலைவளரும்
அழகான சோழனே,
பிடிதோறும் நடிப்பெனும்
பெருமித வேழனே!

நடிப்பென்ற கலையிந்த
நானிலம் உளமட்டும்
துடிப்புள்ள கலைஞனாய்த்
தோன்றுவாய்; துலங்குவாய்!
படிப்புள்ள அறிஞனாய்ப்
பாராட்ட உலவுவாய்!
முடிவிலாப் பெரும்புகழை
முப்போதும் எய்துவாய்!

வடிப்பிலாக் காவிரியாய்
வளமாக வாழுவாய்;
தடுப்பிலா நெடுவானாய்த்
தவழ்ந்தென்றும் நீளுவாய்!
விடிகின்ற பொழுதென்றும்
விளம்புமுன் புகழன்றோ!
நொடிதோறும் உன்பெயர்
நுவலாத பொழுதுண்டோ!

செடியெலாம் பூக்கின்ற
செழிப்பெலாம் பொலிகின்ற
கொடியெலாம் மலர்கின்ற
கோடிவகைப் பூக்களால்
நடிகருள் திலகமே
நாளெலாம்நீ வாழ்கென்போம்!



அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, விருதுநகர் கிழக்கு ஒன்றியம், கோல்வார்பட்டி கிராமத்தில் தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் முழு திரு உருவ வெண்கலச்சிலையை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் – விருதுநகர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் சொந்த செலவில் அமைத்து கொடுத்து திறந்து வைத்தார்.

## பிரதமர் மோடி – முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!

# நம்பிக்கையூட்டும் சந்திப்பு! கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை!

## “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!

சென்னை, அக். 1–

பிரதமர் மோடி – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவாகளின் சந்திப்பு நம்பிக்கையூட்டும் சந்திப்பாக அமைந்துள்ளது. வழக்கமான கோரிக்கை மனுக்கள் போல இல்லாமல், இந்த கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை இருக்கும் என்பதை உறுதியாக நம்பலாம் என ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.



தலையங்கம்
தினத்தந்தி
30.9.2024 (திங்கட்கிழமை)
நம்பிக்கையூட்டும் மகிழ்ச்சி சந்திப்பு!

அது வருமாறு:–

அரசியலில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், ஒரு மாநிலத்தின் முதல்அமைச்சர், பிரதமரை சந்தித்து தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்துவது என்பது வழக்கமான நடைமுறையாகும். குடும்பத்தில் மூத்த சகோதரரை, இளைய சகோதரர் சந்தித்து தனது தேவைகளை சொல்லும் உணர்வில் தான் பிரதமருடன் மாநில முதல் –அமைச்சர்களின் சந்திப்பை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால், ஒவ்வொரு சந்திப்பின் போதும் மாநில முதல் – அமைச்சர்கள், பிரதமரிடம் விடுக்கும் கோரிக்கைகளில் எத்தனை கோரிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன என்பது விவாதத்துக்குரிய ஒன்றாகும். அந்த வகையில், தமிழக முதல் – அமைச்சர் பொறுப்பில் இருப்பவர்கள், பிரதமரை அவ்வப்போது சந்தித்து பல கோரிக்கைகளை பட்டியலிடுவது வழக்கம். இதில், பெரும்பாலான கோரிக்கைகள் அடுத்த முறை அவர்கள் பிரதமரை சந்திக்கும் போது கொடுக்கும் மனுவிலும் இடம் பெற்றிருக்கும். ஆனால், கடந்த வாரம் வெள்ளிக்கிழமை டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை தமிழக முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து கொண்டது மிகவும் வித்தியாசமானது. பொதுவாக, மாநில முதல் – அமைச்சர்கள் பிரதமரை சந்தித்து பேச நேரம் கேட்டால், அதை ஒதுக்கித்தர சில நாட்கள் ஆகும். இந்த முறை முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா சென்றுவிட்டு திரும்பியவுடன் பிரதமரை சந்திக்க நேரம் கேட்கப்பட்டது. பிரதமரும் இந்த சந்திப்புக்கான நேரம் குறித்து உடனடியாக முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தகவல் தெரிவித்துவிட்டார்.

அதன்படி, கடந்த 27–ந்தேதி நடந்த சந்திப்பின்போது, பிரதமர் நரேந்திரமோடியிடம் முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். அதுவும் வழக்கத்துக்கு மாறாக இருந்தது. எப்போதும் நிறைய கோரிக்கைகள் பக்கம் பக்கமாக மனுவில் இடம்பெற்றிருக்கும். ஆனால், இந்த முறை கொடுக்கப்பட்ட கோரிக்கை மனு நறுக்கு தெறித்தாற்போல 3 கோரிக்கைகளுடன், அதுவும் மக்களுக்கு உடனடி தேவையான கோரிக்கைகளைக்கொண்ட மனுவாகவே இருந்தது. வழக்கமாக கொடுக்கும் மனுக்களில் என்னென்ன கோரிக்கைகள் பிரதமருக்கு தமிழகத்தின் சார்பில் விடுக்கப்பட்டது? என்பது மக்களுக்கு மட்டு மல்லாமல், பிரதமருக்கும் நினைவில் வைத்துக் கொள்வது கடினம்.

ஆனால், இந்த முறை கொடுக்கப்பட்ட 3 கோரிக்கைகள், அதாவது சென்னை மெட்ரோ ரெயிலின் இரண்டாவது கட்ட பணிகளுக்கு மத்திய அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு, ஒருங்கிணைந்த கல்வி திட்டமான ‘சமக்ரா சிக்சா அபியான்’ திட்டத்துக்கு மத்திய அரசாங்கம் தர வேண்டிய நிதியுதவி, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் சந்தித்து வருகிற வாழ்வாதார பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஆகியவை பிரதமரிடம் கொடுக்கப்பட்ட மனுவில் இடம்பெற்றிருந்தன. இந்த சந்திப்பின் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், பிரதமருடனான சந்திப்புக்கு 15 நிமிடம் மட்டுமே நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இருவரும் ஒதுக்கப்பட்ட நேரத்தை தாண்டி 45 நிமிடம் பேசியிருக்கிறார்கள். 3 கோரிக்கைகளை தவிர, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினின் அமெரிக்க சுற்றுப்பயணம் உள்ளிட்ட வேறு பல விஷயங்களும் பேசப்பட்டு இருக்கிறது. இந்த சந்திப்பு குறித்து முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின், “இது இனிய சந்திப்பாக அமைந்தது. பிரதமர் மகிழ்ச்சியுடன் பேசினார்” என்று கூறியதைப்பார்க்கும் போதும், பிரதமர் நரேந்திரமோடி முதல் – அமைச்சரின் கோரிக்கைகளை விரைவாக கலந்தாலோசித்து முடிவுகளை தெரிவிப்பதாக உறுதியளித்து இருப்பதைப்பார்க்கும் போதும், இது தமிழ்நாட்டுக்கு பயன் அளிக்கும் நம்பிக்கையூட்டும் சந்திப்பாக அமைந்திருக்கிறது என்பதுதான் எல்லோருடைய எண்ணமாகவும் இருக்கிறது. வழக்கமான கோரிக்கை மனுக்கள் போல இல்லாமல், இந்த கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை இருக்கும் என்பதை உறுதியாக நம்பலாம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




01.10.2024
9-ஆம் ஆண்டு நினைவேந்தல்



ஆற்காடு நகரக் கழக செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.
மு.வேலூர் மாவட்டப்பொருளாளர், மு.தணிக்கைக்குழு உறுப்பினர்
மு.ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர்
P.N.சுப்பிரமணியன் Ex.MLA.,

கடமை உணர்வுடன் மக்கள் பணியாற்றி, கண்ணியம் மாறாமல் வாழ்ந்துகாட்டி, கட்டுப்பாடு காத்து கழகம் வளர்த்தாய்! என்றும் நீங்கள் வகுத்துத்தந்த கழகப்பாதையில் தடம்மாறாது எங்கள் பயணம் தொடரும்.

என்றும் உங்களது நீங்காத நினைவுகளை சுமந்து

P.N.S.இராஜசேகரன்
நகர அவைத்தலைவர்
மு.நகர செயலாளர்-ஆற்காடு

Dr.P.N.S.சரவணன் M.B.B.S.,M.S.,F.A.I.S.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்,
இராணிப்பேட்டை

Dr.S.பவளக்கொடி சரவணன் B.D.S.,
ஆற்காடு நகரமன்ற துணைத்தலைவர், ஆற்காடு நகராட்சி
மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவி, இராணிப்பேட்டை

மற்றும் குடும்பத்தினர்கள் ஆற்காடு நகரம், இராணிப்பேட்டை மாவட்டம்